**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.268/2019**
**PW-2**

05.05.2026

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. தீபக்குமார் | | |
| த/பெ. | திரு. வெங்கடாசலம் | Calling | தனியார் நிறுவனம் |
| Village | நங்கவரம் | Religion | |
| Taluk | குளித்தலை | Age | 30/2026 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது நங்கவரத்தில் வசித்து வந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் . கடந்த 02.08.2017 அன்று பெட்டவாய்த்தலையில் உள்ள பேக்கரிக்கு அருகே விபத்து நடந்தது அது தொடர்பாக 03.08.2017 அன்று காலை 09 மணியளவில் பெட்டவாய்த்தலை காவல் நிலைய போலீசார் விபத்து சம்பவ இடத்திற்கு வந்து வரைபடம் வரைந்தார்கள் அப்போது போலீசார் என்னிடமும் என் அருகில் இருந்து அருண்குமார் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் . அந்த பார்வை மகஜர் அ .சா.ஆ.2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் நான் ஒன்றும் அருண் ஒன்றும் போட்டோம். வரைபடம் வரைந்த தாளில் கையொப்பமிட்டேன் என்றால் இல்லை எழுதிய தாளில் கையொப்பம் செய்தேன் . சாட்சியிடம் வரைபடத்தை காட்டி பேக்கரி காணப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்கிறார் . நான் சம்பவ இடத்தில் இல்லை காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அருண் அப்பா பெயர் மற்றும் ஊர் தெரியாது என்றால் சரிதான் . நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/-xxxx**

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
**Srirangam.**